Register Number

**Part III**

# வணிகவியல் / COMMERCE

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பிரிவு - அ

குறிப்பு : i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

ii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. 40 × 1 = 40

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து உமது விடைத்தாளில் எழுதுக :

1. ஒரு குடும்பத்தின் பிறப்பின் மூலம் உறுப்புமை ஏற்படுவது

அ) தனி வணிகர்

ஆ) இந்து கூட்டுக் குடும்பம்

இ) கூட்டுறவு சங்கம்

ஈ) கூட்டாண்மை.

2. ஒரு பன்னாட்டு நிறுமம் ..................... எனவும் அழைக்கப்படுகின்றது.

அ) உலக அளவில் பெரியது

ஆ) கூட்டாண்மை

இ) கூட்டுறவுச் சங்கம்

ஈ) பொதுக் கூட்டுரு.

3. தொழிலமைப்புகளின் மிகப்பழமையான வடிவம்

அ) கூட்டுறவு ஆ) கூட்டாண்மை

இ) தனியாள் வாணிகம் ஈ) அரசு நிறுமம்

[ Turn over

4. உறங்கும் கூட்டாளி இவ்வாறு அழைக்கப்படுவர்.

அ) உழைக்கும் கூட்டாளி

ஆ) உழையாக் கூட்டாளி

இ) பெயரளவுக் கூட்டாளி

ஈ) முரண்தடைக் கூட்டாளி.

5. பின்வரும் சிறப்பியல்புகளில் எது தனி வணிகருக்கு ஏற்றதல்ல ?

அ) தனி நபர் உரிமம்

ஆ) தனி மனிதக் கட்டுப்பாடு

இ) எல்லா இலாபமும் உரிமையாளருக்கே

ஈ) நெகிழ்ச்சித் தன்மையற்றது.

6. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை - A ( Table - A ) என்பது

அ) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி

ஆ) இருப்பு நிலைக்குறிப்பின் மாதிரிப் படிவம்

இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி

ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி.

7. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் ( Debenture holders ) என்பவர் - அதன்

அ) கடனாளர்கள்

ஆ) உறுப்பினர்கள்

இ) கடன் வாடிக்கையாளர்

ஈ) கடன் வாங்கியோர்.

8. .................. எண்ணிக்கைக்கு மிகாத பொது வரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர் இயக்குநர் பதவி வகிக்கலாம்.

அ) 10

ஆ) 15

இ) 20

ஈ) வரம்பில்லை.

9. இரு பொது ஆண்டு கூட்டங்கட்கு உள்ள இடைவெளி ............ மேல் செல்லக் கூடாது.

அ) 15 மாதங்கட்கு

ஆ) 12 மாதங்கட்கு

இ) 18 மாதங்கட்கு

ஈ) 20 மாதங்கட்கு.

10. சபைத் தலைவருடன் சேர்ந்து செபியில் ( SEBI ) எவ்வளவு உறுப்பினர்கள் உள்ளனர் ?

அ) 5 ஆ) 7

இ) 6 ஈ) 8.

11. கூட்டுறவு அமைப்பில்

அ) ஒரு பங்கு ஒரு வாக்கு முறை கடைபிடிக்கப்படுகிறது

ஆ) ஒரு நபர் ஒரு வாக்கு முறை கடைபிடிக்கப்படுகிறது

இ) ஒரு நபருக்கு இரு வாக்குரிமைகள் உண்டு

ஈ) பங்குகள் மாற்றியல்பு தன்மை கொண்டவை.

12. பொதுமக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம்.

அ) பொதுக்கழகம்

ஆ) துறைவாரி அமைப்பு

இ) அரசு நிறுமம்

ஈ) மேற்கூறிய நிறுவனங்கள் எதுவுமில்லை.

13. செபி இச்சட்டப்படி உருவாக்கப்பட்டது.

அ) பத்திரங்கள் ஒப்பந்த ( ஒழுங்குபடுத்துதல் ) சட்டம்

ஆ) இந்தியப் பத்திர மற்றும் மாற்றங்கள் வாரியச்சட்டம்

இ) நிறுமங்கள் சட்டம்

ஈ) இந்திய அரசியல் சாசனம்.

14. இந்தியாவிலுள்ள ஏற்பிசைவு பெற்ற பங்கு மாற்றகங்களின் எண்ணிக்கை

அ) 20 ஆ) 21

இ) 22 ஈ) 24.

15. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கீழ்க்கண்டவற்றுள் எந்நடவடிக்கை வழக்கமாக மேற்கொள்ளப்பட மாட்டாது ?

அ) தணிக்கையர் நியமனம்

ஆ) கடனீட்டுப் பத்திர வெளியீடு

இ) பதவி விலகுமிடத்திற்கு இயக்குநர்களை நியமித்தல்

ஈ) பங்காதாயம் விளம்பப்படல்.

16. ஒரு நிறுமத்தில் செயல்பாட்டு எல்லையை கீழ்க்கண்ட ஆவணங்களுள் எது உணர்த்துகிறது ?

அ) நிறுமத்தின் அமைப்பு முறையேடு

ஆ) நிறுமத்தின் செயல்விதிகள்

இ) தகவலறிக்கை

ஈ) சட்டமுறை உறுதி விளம்பல்.

17. எச்சரிக்கையான ஊக வணிகர் .................. எனப்படுவர்.

அ) கலைமான்

ஆ) காளை

இ) முடவாத்து

ஈ) கரடி.

18. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல் எந்தச் சட்டத்தின் கீழ் நடைபெறுகிறது ?

அ) 1949 சட்டம்

ஆ) 1956 சட்டம்

இ) 1932 சட்டம்

ஈ) 1912 சட்டம்.

19. கூட்டுறவில் குறைந்தபட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை

அ) 2

ஆ) 7

இ) 10

ஈ) 25.

20. முதன்முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு

அ) இங்கிலாந்து

ஆ) அமெரிக்கா

இ) சுவிட்சர்லாந்து

ஈ) இந்தியா.

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

21. தமிழ்நாடு மின்சார வாரியம் ........................க்கு எடுத்துக்காட்டாகும்.

22. அரசு நிறுமத்தில் ஊழியர் ........................ அல்லர் .

23. இந்தியாவில் கூட்டாளியின் பொறுப்பு ........................ .

24. உழைக்கும் கூட்டாளி ........................ எனவும் அழைக்கப்படுகிறார்.

25. தனி வரையறு நிறுமமொன்றின் குறைந்த அளவு உறுப்பினரின் எண்ணிக்கை ........................ ஆகும்.

26. ஒரு பொது வரையறு நிறுமம் தனது கடனீட்டுப் பத்திரங்களை வாங்குமாறு பொதுமக்களிடம் அழைப்பு விடும் விளம்பரத்திற்குப் பெயர் ........................ .

27. வழக்கமாக பெறக்கூடிய நிலையான வீதப் பங்காதாயத்துடன் கூடுதல் பங்காதாயம் பெற உரிமையுள்ள பங்குகள் ........................ பங்குகள் என அழைக்கப்படும்.

28. பங்குநர்கள் தான் நிறுமத்தின் உண்மையான ........................ ஆவர் .

29. சட்டமுறை அறிக்கையை நிறும உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கூட்டம் நடைபெறும் நாளுக்கு குறைந்தபட்சம் ........................ நாட்களுக்கு முன்னராவது அனுப்பி வைக்க வேண்டும்.

30. செயல்முறை விதிகளில் மாற்றம் செய்ய ........................ தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

31. நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் வழக்கமாக ........................ ல் பெயரிடப்பட்டிருப்பர்.

32. முதன்மைச் சந்தையில் ........................ பங்குகளின் வாணிகம் நடைபெறுகிறது.

33. விண்ணப்பத் தொகை ஒரு பங்கின் மதிப்புத் தொகையில் ........................ சதவிகிதத்திற்கு குறைவாக இருக்கக் கூடாது.

34. குறுமங்கொப்பம் வெளியிடப்படும் பங்கு முதலில் ........................ சதவிகிதமாக நிர்ணயிக்கப்படுகிறது.

[ Turn over

35. முதலீட்டாளர்கள் பங்குகளை ( Securities ) ...................... காலத்திற்கு தம்மிடம் வைத்துக் கொள்வர்.

36. ஆயத்தக் கொடுப்பு ஒப்பந்தங்கள் ...................... எனவும் அழைக்கப்படும்.

37. கோப்பரெரி என்ற இலத்தீன் மொழியின் பொருள் ...................... .

38. கூட்டுறவு அமைப்பில் ...................... விழுக்காடு மட்டுமே பங்காதாயமாக பகிர்ந்தளிக்கப்படுகிறது.

39. அரசுத் தொழில் வடிவமைப்புகளில் மிகவும் தொன்மையானது ...................... .

40. வேலைப் பகிர்வு முறை என்பது ...................... .

## பிரிவு - ஆ

குறிப்பு : i) ஏதேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்க.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 4 வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.

iii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. $10 \times 4 = 40$

41. பன்னாட்டு நிறுமம் குறித்து நீவிர் அறிவது யாது ?

42. அமைப்பை வரையறு.

43. கூட்டு, தனித்தனிப் பொறுப்பு என்றால் என்ன ?

44. கூட்டாண்மை கலைப்பும், நிறுவனக் கலைப்பும் ஒன்றா ? விளக்குக.

45. நிறுமச் செயல்முறைகளில் எவை குறித்து குறிப்பிடப்பட்டிருக்கும் ?

46. பிடிப்பு நிறுமம் என்பது என்ன ?

47. சிறப்பு பொதுக்கூட்டத்தை யார் கூட்டலாம் ?

48. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை ?

49. தனியாள் வணிகர் - வரைவிலக்கணம் தருக.

50. ஊக வணிகம் என்றால் என்ன ?

51. போல்ட்டின் ( BOLT ) சாதனைகள் யாவை ?

52. கூட்டுறவு - வரையறு.

53. தனக்குத்தானே உதவி, பரஸ்பர உதவி என்பதன் முக்கியத்துவம் யாது ?

54. அரசுத் தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம் ?

55. இராணுவம் சார்ந்த தொழில்களுக்கு துறைமுறை அமைப்பே சிறந்ததென எதனால் கூறப்படுகிறது ?

## பிரிவு - இ

குறிப்பு : i) ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

ii) ஒவ்வொன்றிற்கும் ஒரு பக்க அளவிற்கு மிகாது விடையளி.

iii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. $5 \times 8 = 40$

56. கீழ்வருவனவற்றுக்கு சிறுகுறிப்புகள் வரைக.

அ) கட்டுப்பாட்டு வீச்செல்லை

ஆ) நெகிழ்ச்சித் தன்மை.

57. முரண்தடைக் கூட்டாளி - உரிமைப் போலிக் கூட்டாளி பற்றி விவரித்து எழுதுக.

58. நிறும அமைப்பு முறையின் நன்மைகளில் ஏதேனும் நான்கினை மட்டும் விவரி.

59. சட்டமுறை அறிக்கையில் காணப்பெற வேண்டியவை யாவை ?

60. ஊக வணிகர், முதலீட்டாளர் இவர்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?

61. பட்டியலிடுதல் என்றால் என்ன ? பட்டியலிடுதலின் பயன்கள் யாவை ?

62. கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தந்து, அதன் சிறப்பியல்புகளைத் தருக.

63. அரசு நிறுமங்களின் சிறப்பியல்புகள் யாவை ?

[ Turn over

## பிரிவு - ஈ

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

ii) ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்க அளவிற்கு மிகாது விடையளி.

iii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. 4 × 20 = 80

64. அமைப்பின் கோட்பாடுகளை விவரி.

*அல்லது*

கூட்டாண்மையின் சிறப்புக் கூறுகளை விவரி.

65. இயக்குநருக்குரிய அதிகாரங்கள் யாவை ? அவற்றின் மீது என்னென்ன கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன ?

*அல்லது*

பங்குகட்கும், கடனீட்டுப் பத்திரங்கட்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

66. செபியின் பணிகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குக.

*அல்லது*

கீழ்வருவனவற்றுக்கு விளக்கக் குறிப்பு வரைக :-

அ) பகராள்

ஆ) குறைவெண்

இ) நிகழ்ச்சிக் குறிப்பு

ஈ) நிகழ்ச்சி நிரல்.

67. கூட்டுப் பங்கு நிறுமத்திற்கும், கூட்டுறவுச் சங்கத்திற்கும் உள்ள வேறுபாட்டினைக் கூறுக.

*அல்லது*

அரசுத் தொழில்களின் நோக்கங்களை விவரி.